**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1097/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜேந்திரன் | Prosecution | PW–1 Cross |
| Father Name | கேசவன் | Defence | |
| Village | புத்தூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 62/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

07.05.2026.

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

நான் வழக்கமாக **PK** ராஜேந்திரன் என்றுதான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். **PK** என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் புத்தூர் கேசவன் ராஜேந்திரன் என்று அர்த்தம். நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் நான் அந்த தொழிலே செய்யவில்லை. இதே நீதிமன்றத்தில் நான் இந்த வழக்கு தவிர்த்து வேறு இரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் தவறு. இந்த ஒரு வழக்கு மட்டும் தான் உள்ளது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மெஸ் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு நிலங்கள் உள்ளதா என்றால் கிடையாது. அப்படியானால் எனது வருமானம் ஹோட்டல் தொழில் நம்பி மட்டும்தான் உள்ளதா என்றால் ஆமாம்.

ஹோட்டல் வருமானத்தில் ஒரு நாளைக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்றால் தோராயமாக ரூபாய் 1500 கிடைக்கும். அதை வைத்து தான் நான் என் குடும்பத்தை நடத்தி வருகிறேனா என்றால் ஆமாம். எனது மனைவியும் சம்பாதிக்கிறார் அந்த வருமானமும் உள்ளது. எனது மனைவி எங்கு வேலை பார்க்கிறார் என்றால் எங்கள் கடையை பார்த்துக் கொள்கிறார். நான் சொல்லும் லாப கணக்கு ஆட்களுக்கு சம்பளம் போக மீதி பணமா என்றால் ஆமாம்.

எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் மட்டும் வைத்துள்ளேன் வேறு கணக்குகள் கிடையாது. சராசரியாக எவ்வளவு தொகை என் வங்கிக் கணக்கில் இருக்கும் என்றால் ரூபாய் 5 லட்சம் ரூபாய் பத்து லட்சம் இருக்கும். தற்போது என் மகளுக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டதால் அவ்வளவு தொகை வங்கிக் கணக்கில் இல்லை. அதற்கு முன்பு நான் தனலட்சுமி இல் சீட்டு போட்டு பணம் சேர்த்து வைத்த பணம் இருந்தது. தனலட்சுமி இல் பொதுவாக 50 மாதங்களுக்கும் 30 மாதங்களுக்கும் தான் சீட்டு உள்ளது என்றால் சரிதான். எனது மகளுக்கு எந்த வருடம் திருமணம் செய்து வைத்தேன் என்றால் 04. 9. 2026 இல் திருமணம் செய்து வைத்தேன் எனது தொழில் வருமானம் மற்றும் சீட்டு பணத்தைக் கொண்டுதான் மேற்படி திருமணத்தை செய்து வைத்தேனா என்றால் ஆமாம்.

எதிரி எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் கூத்தியாம்பேட்டையில் வசிக்கிறார்கள். அவரது கணவர் பெயர் என்ன என்றால் பக்ருதீன் என்பதாகும். எதிரி யார் மூலமாக எனக்கு தெரியும் என்றால் அவர்கள் ஊரில் வசிக்கும் ரகமதுல்லா என்னும் எனது நண்பர் மூலமாக 2021 ஆம் வருடம் முதல் பழக்கம். அதற்கு முன்பு அவரை எனக்கு தெரியாது. மேற்படி ரகமதுல்லாவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார் தான். இந்த வழக்கில் சொல்லி உள்ள பரிவர்த்தனைக்கு முன்பாக எதிரிக்கு ஏதேனும் கடன் கொடுத்துள்ளேன் என்றால் கிடையாது. எதிரி புரோநோட்டு எழுதி கொடுத்ததன் பெயரில் தான் கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். அந்த ப்ரொனோட்டை நம்பி தான் ரூபாய் 6 லட்சம் கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் அந்த பணத்தை வட்டிக்கு கொடுத்தேனா என்றால் வட்டிக்காக கொடுக்கவில்லை. பொதுவாக கடனுறுதி சீட்டுகளில் வட்டி பற்றி எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் அந்த புரோநாட்டில் வட்டி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. நான் குறிப்பிடும் புரோநோட்டு கையால் எழுதப்பட்டதா என்றால் இல்லை பிரிண்டட் பார்மட் ஆகும். அந்த புரோ நோட்டு பார்மட் யாரிடம் வாங்கப்பட்டது என்றால் நான் வாங்கவில்லை எதிரி தான் அதனை எடுத்து வந்தார். அந்த பார்மட்டில் ரூபாய் 100க்கு எவ்வளவு ரூபாய் வட்டி என்று column இருந்ததா என்றால் இருந்தது. எதிரி முஸ்லிம் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றாலும் அவர்களுக்கும் எனக்கும் 2021 க்கு முன்பு பழக்கம் ஏதும் இல்லை என்றாலும் சரிதான். இந்த சூழ்நிலையில் 6

லட்ச ரூபாய் கடன் கொடுக்க என்ன தேவை ஏற்பட்டது என்றால் எனது நண்பர் சொன்னதால் கொடுத்தேன். என் நண்பரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேனா என்றால் பெற்றேன்.

நான் சொல்லும் புரோநோட்டை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் எதிரி தான் பூர்த்தி செய்தார். ப்ரொனோட்டி எதிரியே வீட்டில் பூர்த்தி செய்து சாட்சி கையொப்பம் செய்து எடுத்து வந்து கொடுத்தாரா என்றால் ரஹ்மத்துல்லாஹ் என் முன்பு தான் சாட்சி கையொப்பம் செய்தார். அவரைத் தவிர வேறு யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் யாரும் செய்யவில்லை. ரஹ்மத்துல்லா எங்கு வைத்த கையொப்பம் செய்தார் என்றால் என் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தார் அப்போது புரோநோட்டு பூர்த்தி செய்த நிலையில் இருந்தது. புரோநோட்டின் அடிப்பகுதியில் சாட்சியம் எழுதியதும் நானே என்கிற இடத்தில் கையொப்பம் செய்தது யார் என்றால் ஞாபகம் இல்லை. அந்த காலத்தையும் எதிரி பூர்த்தி செய்த எடுத்து வந்து விட்டாரா என்றால் ஆமாம்.

எனது வங்கிக் கணக்கு PK ராஜேந்திரன் என்றுதான் உள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு குறிப்பிட்டு காசாலை கொடுத்தால் தான் செல்லுபடி ஆகுமா என்றால் ஆமாம். எதிரிக்கு எப்போது பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் 08.08.2021 அன்று கொடுத்தேன். அந்த தேதிகளுக்கு புரோநோட்டு எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். 08.08.2023 அன்று சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்த புரோநோட்டை பெற்றுச் சென்றதாகத்தான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல 2023 என்றுதான் இந்த வழக்கின் புகாரிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி திரும்ப பெற்றுக் கொண்டதுதான் 2023 ஆம் வருடம் ஆகும் அந்த ப்ரோநோட்டு எழுதி கொடுத்தது 2021 இல் தான் அவ்வாறுதான் இந்த வழக்கின் புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் 2023 இல் புரோநோட் எழுதி கொடுத்ததாகத்தான் மேற்படி இரண்டு ஆவணங்களிலும் காணப்படுகிறது என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிகையின் ஐந்தாவது பத்தியில் எதிரி எனக்கு 8.8.2023 அன்று எழுதிக் கொடுத்த புரோநோட்டை பெற்றுக் கொண்டதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில்

அந்த புரோநோட்டை தாக்கல் செய்தால்தான் எப்போது அதை எழுதிக் கொடுக்கப்பட்டது என்கிற உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. எதிரி 08.08.2021 ம் தேதி அன்று எந்த புரோநோட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் நானும் அவருக்கு ரூ.6 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கற்பணையாக பிராமிசரி நோட் எழுதி கொடுத்ததகா எனது புகார் மற்றும் அறிப்பில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதினை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

ரூ.6 லட்சம் பணத்தை தமிழ்நாடு மெர்கண்டைல் பேங்கில் இருந்து எடுத்ததற்கு ஆதாரம் தாக்கல்செய்யமுடியுமா என்றால் தபால் கணக்கில் இருந்து எடுத்தேன். அது எனது மனைவியின் கணக்கு ஆகும். அந்த கணக்கிலிருந்து பணம் எடுத்ததுற்கு சான்றாக பணம் எடுத்தற்காக சான்று எடுக்க முடியுமா என்றால் முடியும். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில்தான் தபால் அலுவலகத்தில் இருந்து பணம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை அதற்கு ஒரு வாரமோ அல்லது பத்து நாட்களுக்கு முன்போ எடுக்கப்பட்டது. எதிரி எனது வீட்டிற்கு வந்து 30.10.2023 அன்று இரண்டு காசோலைகள் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த இரு காசோலைகளும் ஒரே நாளில் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். அவை என் முன்னிலையில் தான் பூர்த்தி செய்யப்பட்டதா என்றால் ஆமாம். காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் எதிரி பூர்த்தி செய்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது ஏனனில் ஏற்கனவே பூர்த்தி செய்துதான் என்னிடம் எடுத்துவரப்பட்டது. என் முன்பாக பூர்த்தி செய்யவில்லை . அது தமிழில் பூர்த்தி செய்யப்பட்டதா அல்லது ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டதா என்றால் சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கு காசோலைகள் இரண்டும் 2015 ஆம் வருடத்தில் வங்கியால் எதிரிக்கு வழங்கப்பட்டவர் என்றால் சரிதான். மேற்படி இரு காசோலைகளிலும் எதிரியின் கையொப்பம் மற்றும் இதர வாசகங்களுக்கு இடையே பேனா மை வித்தியாசம் காணப்படுகிறது என்றால் சரிதான். ஆகவே காசோலை பூர்த்தி செய்யப்பட்ட அதே தேதியில் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் காசோலை 30 10 2023 தேதி இடப் பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த காசோலை எண் 504613 என்றால் சரிதான். இந்த முதல் காசோலை கொடுக்கும் போது 10.11.2023 ல் வங்கியில்

தாக்கல் செய்யசொன்னதாக சொல்கிறேன் என்றால் சரிதான். காசோலை கொடுக்கப்பட்ட தேதியில் அவர் வங்கிக் கணக்கில் போதிய தொகை இல்லை என்பதால் தான் அவ்வாறு சொன்னார் என்றால் சரிதான். அந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியும். வசூலுக்கு போட்ட பிறகு தெரியும். அதே முப்பது பத்து ரெண்டாயிரத்தி இருபத்தி மூன்றில் இரண்டாவது காசோலை 50 46 14 என்கிற இலக்கமிட்ட காசோலை கொடுக்கப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த காசோலை 02.11.2023 என்று பின் தேதி இட்டு வழங்கப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த காசோலையை 21 11 2023 தேதியில் தாக்கல் செய்யச் சொன்னதாக என் புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் காசோலை கொடுத்த போது அவர் கணக்கில் பணம் இல்லை என்பது எனக்கு நன்றாக தெரியும் என்றால் தவறு அப்போது எனக்கு அது பற்றி தெரியாது. நான் எதிரியிடம் காசோலை தேதியிலேயே வசூலுக்கு போடலாமா என கேட்டேனா என்றால் கேட்டேன் அதற்கு எதிரி பத்து நாட்கள் கழித்து போடுங்கள் என்றும் அப்போதுதான் வங்கியில் பணம் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

2வது காசோலையில் காணப்படும் எதிரியின் கையொப்பம் மற்றும் இதர வாசகங்களுக்கு இடையே பேணாமை வித்தியாசம் காணப்படுகிறது என்றால் சரிதான். முதல் காசோலையில் PK ராஜேந்திரன் கேசவன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவது காசோலையில் ராஜேந்திரன் கேசவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் பிகே என்கிற இனிஷியல் இல்லை என்றாலும் சரிதான். அது அவர்கள் செய்த தவறாகும். மேற்படி விவரங்களை வைத்து பார்க்கும்போது இரண்டு காசோலைகளும் வேறு வேறு தேதிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றால் அது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. மேற்படி காசோலைகளை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்றாலும் அவர் அவரது பிள்ளைகளை வைத்து பூர்த்தி செய்து இருக்கலாம்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**